பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**06 05 2026** **7 15**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்க மத்திய அரசு முழு அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. இந்தியா - வியட்நாம் இடையே பாதுகாப்பு நல்லுறவு குறித்து, அந்நாட்டு அதிபருடன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் ஆலோசனை நடத்தினார்.

3. நான்கு மாநிலங்கள் மற்றும் புதுச்சேரியில், சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், புதிய சட்டசபையை ஏற்படுத்துவதற்கு ஆளுநர்களுக்கு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

4. ஐ.எஸ். அமைப்புடன் இணைந்து தீவிரவாத தாக்குதலில் ஈடுபட சதித்திட்டம் தீட்டிய **3** பேருக்கு எதிராக தேசிய புலனாய்வு முகமை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

5. ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் பஞ்சாப் அணி இன்று சென்னை அணியை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாடு முழுவதும் உணவு தானியத்தை வழங்கி வரும் விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்க மத்திய அரசு முழு அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சரவையின் முடிவுகள் குறித்து தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், அதன் ஒரு பகுதியாக நடப்பு பருவத்தில் கரும்புக்கு குவிண்டால் ஒன்றுக்கு 365 ரூபாய் என்ற நியாயமான விவசாயிகளுக்கு பயனளிக்கக்கூடிய விலையை நிர்ணயிக்க அரசு ஒப்புதல் அளித்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் லட்சக்கணக்கான விவசாயிகள் பயன் பெறுவதுடன், சர்க்கரை ஆலைகள் மற்றும் தொழிலாளர்களும் நன்மை அடைவார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேபோல் பருத்தி உற்பத்தியில் நாடு தன்னிறைவை அடைவதற்கு உறுதிபூண்டிருப்பதாகவும், அதன் முக்கிய நடவடிக்கையாக பருத்தி உற்பத்தியை மேம்படுத்துவதற்கான இயக்கத்தை தொடங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பதை பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் மூலம் ஆலைகளுக்கு பருத்தி எளிதில் கிடைப்பது உறுதி செய்யப்படுவதுடன், உயர் ரக பருத்தி இந்தியாவில் இருந்து ஏற்றுமதியாவதும் அதிகரிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் உலகளாவிய செமிகண்டக்டர் உற்பத்தியில் புதிய திட்டங்களுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பதையும் பிரதமர் வரவேற்றுள்ளார்.

குஜராத் மாநிலம் **Vadinar** என்ற இடத்தில் உலகத் தரத்திலான கப்பல் பழுது பார்க்கும் வசதியை ஏற்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்திருப்பதன் மூலம் நாட்டின் கடலோர தொழில் திறன்கள் வலுப்படுவதற்கான முக்கிய நடவடிக்கை உருவாகி இருப்பதாகவும் திரு. நரேந்திர மோடி அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

புதுதில்லி வந்துள்ள வியட்நாம் அதிபர் திரு. **To Lam** உடன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் நேற்று சந்தித்துப் பேசினார்.

அப்போது இந்தியாவுக்கும் - வியட்நாமுக்கும் இடையேயான பாதுகாப்பு நல்லுறுவு குறித்து இருவரும் விரிவான ஆலோசனை நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மூன்று நாள் பயணமாக இந்தியா வந்துள்ள வியட்நாம் அதிபர் திரு. **To Lam** புதுதில்லியில் இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து இருதரப்பு பேச்சுகள் நடத்த உள்ளார்.

வியட்நாம் அதிபருடன் அந்நாட்டு மூத்த அமைச்சர்கள் மற்றும் வர்த்கப் பிரதிநிதிகளும் இந்தியா வந்துள்ளனர்.

வியட்நாம் அதிபருக்கு இன்று காலை பாரம்பரிய முறையிலான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்திக்கும் அவர், பாதுகாப்பு ஒத்துழைப்பு, கடல்சார் பாதுகாப்பு, வர்த்தகம், தொழில்நுட்பம் மற்றும் இந்திய பசிபிக் பிராந்தியத்தில் நிலவும் சூழ்நிலை குறித்து விரிவான ஆலோசனை நடத்த உள்ளார்.

இந்த சந்திப்பின்போது இரு நாடுகளுக்கும் இடையேயான பொருளாதார நல்லுறவுகளை வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் முக்கிய முடிவு எடுப்பார்கள் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்றும் அவர் கூறினார்.

இன்று மாலை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவையும் வியட்நாம் அதிபர் சந்தித்துப் பேச உள்ளார்.

<<<<>>>>

ஐ.எஸ். தீவிரவாத அமைப்புடன் இணைந்து உயிரி தாக்குதல் நடத்த சதித்திட்டம் தீட்டிய குற்றச்சாட்டின பேரில், 3 பேருக்கு எதிராக தேசிய புலனாய்வு முகமையான என்.ஐ.ஏ. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

இது தொடர்பாக என்.ஐ.ஏ. வெளியிட்டள்ள அறிக்கையில் பொது இடங்களில் அப்பாவி மக்களை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்த ஐ.எஸ். அமைப்பு திட்டமிட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அமைப்புடன் தொடர்புடைய ஹைதராபாதை சேர்ந்த சையத் அகமது முகைதீன், உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஆசாத், முகமது சுஹேன் ஆகியோருக்கு எதிராக ஆயுதங்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் அகமதாபாத் என்.ஐ.ஏ. சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக அதில் கூறப்பட்டுள்து.

<<<<>>>>

இங்கிலாந்து கருவூலத்துறை தலைவர் **Rachel Reeves** உடன் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் காணொலி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.

அப்போது உலக அளவில் தற்போதைய பொருளாதார சூழல் மற்றும் இந்தியா - இங்கிலாந்து இடையேயான நிதிசார் ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் உள்ளிட்ட விஷயங்கள் குறித்து இருவரும் ஆலோசனை நடத்தியதாக நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் தொடர்புடைய பல்வேறு பொருளாதார விவகாரங்கள் குறித்தும அவர்கள் ஆலோசனை நடத்தியதாக அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகம், மேற்குவங்கம், அசாம், கேரள மாநிலங்களிலும், புதுச்சேரி யூனியன்பிரதேசத்திலும் புதிய அரசு அமைப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன.

நடந்து முடிந்த தேர்தலில் தமிழகத்தில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

திரு. விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது.

புதிய சட்டசபை உறுப்பினர்களின் ஆதரவு கடிதங்களுடன் திரு. விஜய், தமிழக ஆளுநர் திரு. அர்லேகரை இன்று சந்திப்பார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மொத்தமுள்ள 234 சட்டசபை உறுப்பினர்களில் தவெக 108 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளதால், பிற கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்கான பணிகளில் அக்கட்சியின் தலைவர் திரு. விஜய் ஈடுபட்டுள்ளார்.

அசாம் மாநிலத்தில் மொத்தமுள்ள 126 தொகுதிகளில் பிஜேபி 82 இடங்களைக் கைப்பற்றி 3வது முறையாக ஆட்சியமைக்க உள்ளது.

மேற்குவங்கத்தில் பிஜேபி 207 தொகுதிகளில் வெற்றி பெற்று முதல்

முறையாக ஆட்சியமைக்கிறது.

இம்மாநிலத்தில் புதிய முதல்வரை தேர்வு செய்வதற்கான பிஜேபி பார்வையாளராக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா நியமிக்கப்பட்டுள்ளார்.

இம்மாநிலத்தில் வரும் 9ஆம் தேதி புதிய அரசு பதவியேற்கும் என்று மாநில பிஜேபி தலைவர் திரு. **Samik Bhattacharya** தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் தேசிய ஜனநாயக கூட்டணி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி ஆட்சியமைப்பதற்கான பணிகளை தொடங்கியுள்ளது.

கேரளத்தில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி ஆட்சியை கைப்பற்றியுள்ளது.

அங்கு முதல்வரை தேர்வு செய்வதற்காக காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன் கார்கேவுடன் திரு. ராகுல் காந்தி நேற்று ஆலோசனை மேற்கொண்டார்.

தமிழகத்தில் திரு. விஜய் தலைமையிலான தவெக-விற்கு ஆதரவு அளிப்பது தொடர்பாக அவர்கள் ஆலோசனை நடத்தியதாக பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. கே.சி. வேணுகோபால் தெரிவித்தார்.

திரு. விஜய் காங்கிரஸ் தலைமையிடம் ஆதரவு கோரி இருப்பதாகவும், மக்களின் தீர்ப்புக்கு மதிப்பளித்து அவருக்கு ஆதரவு

அளிப்பது குறித்து மாநில காங்கிரஸ் தலைமை முடிவெடுக்க அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் திரு. வேணுகோபால் கூறினார்.

<<<<>>>>

மேற்குவங்க மாநிலத்தில் பிஜேபி அறுதிப்பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றிருப்பதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக திரு. ட்ரம்ப் வெளியிட்டுள்ள பதிவில் வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றியாக வெள்ளை மாளிகை இதனை கருதுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல் அசாம் மாநிலத்தில் ஆட்சியை தக்கவைத்துக்கொண்டிருப்பதற்கும் திரு. ட்ரம்ப் பிரதமருக்கு வாழத்து தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மேற்குவங்கத் தேர்தலில் தோல்வியடைந்துள்ள திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் செல்வி மம்தா பானர்ஜி, முதலமைச்சர் பதவியில் இருந்து தாம் விலகப்போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமது பதவி விலகல் கடிதத்தை ஆளுநரிடம் அளிக்கும் பேச்சுக்கே இடமில்லை என்று கூறினார்.

இதனிடையே ஜனநாயகத்தை கேலிக்கூத்தாகவும், முட்டுக்கட்டை ஏற்படுத்தவும் செல்வி மம்தா பானர்ஜி மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றி பெறாது என்று பிஜேபி மூத்த தலைவர் திரு. **Bimal Shankar Nandi** தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

விவசாயிகளின் நலன்களைக் கருத்தில் கொண்டு **4** ஆயிரத்து **800** கோடி ரூபாய்க்கும் அதிகமான குறைந்தபட்ச ஆதரவு விலையை வழங்குவதன் மூலம் ஒரு உறுதியான நடவடிக்கையை மத்திய அரசு எடுத்துள்ளது.

இதற்கான ஒப்புதலை மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சௌஹான் அளித்துள்ளார்.

நடப்பு ரபி பருவ காலத்தில் கர்நாடகத்தில் **9** ஆயிரம் மெட்ரிக் டன் சூரியகாந்தி பூக்களை குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்வதற்கும் அவர் ஒப்புதல் வழங்கியுள்ளதாக வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் 69 கோடி ரூபாய்க்கும் அதிகமான குறைந்தபட்ச ஆதரவு விலை கிடைத்திருப்பதாகவும், சூரியகாந்தி விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

இதேபோல் மகாராஷ்டிர மாநிலத்தில் நடப்பு பருவத்தில் கொண்டை கடலை கொள்முதல் வரம்பை 8 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்த்தியுள்ளதாகவும் வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஹோர்முஸ் நீரிணைப் பகுதியை கடப்பதற்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சரக்கு கப்பல்களை பாதுகாப்புடன் கொண்டு செல்ல கடற்படை நடவடிக்கைகளை அமெரிக்கா தொடங்கியுள்ளது.

உலக அளவிலான பொருளாதாரத்தை முடக்கும் நடவடிக்கையில் ஈரான் சட்டவிரோதமாக ஈடுபட்டிருப்பதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. மார்கோ ரூபியோ குற்றம் சாட்டியுள்ளார்.

ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கையை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் பஞ்சாப் அணி இன்று சென்னை அணியை எதிர்கொள்கிறது.

புதுதில்லியில் நடைபெறும் இப்போட்டி இரவு மணி **7.30**க்கு தொடங்குகிறது.

-------------

உலக பேட்மிண்டன் தரவரிசை பட்டியலில் இந்தியாவின் **Unnati Hooda, 19**வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் சாய்னா நேவால், பி.வி. சிந்து ஆகியோருக்கு பிறகு இந்த மைல்கலை எட்டிய **3**வது இந்தியர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.

--------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை அணி **8** விக்கெட் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

தில்லியில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த தில்லி அணி நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **7** விக்கெட் இழப்புக்கு **155** ரன் எடுத்தது.

**156** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய சென்னை அணியின் தொடக்க ஆட்டக்கார் சஞ்சு சாம்சன், **52** பந்துகளில் **87** ரன் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

கார்த்திக் ஷர்மா **41** ரன் எடுத்தார்.

**17** புள்ளி **3** ஓவரில் சென்னை அணி **2** விக்கெட்டை மட்டுமே இழந்து **159** ரன் எடுத்து வெற்றி பெற்றது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஹைதராபாத் அணி - பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது. இரவு மணி **7.30**க்கு இப்போட்டி தொடங்குகிறது.

**<<<<The End>>>>**